**செம்பாக்கம் நகராட்சியில் 30.6.2020ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன் 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.662** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 10.6.2020 அன்று கோரப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 2 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு நீரேற்ற மோட்டார் இயக்குதல், குடிநீர் விநியோகம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை இயக்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 9.80 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.663 அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 2013 அத்தியாவசிய பராமரிப்பு பணிகளை தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி முடிக்கவும் அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.18000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.664 அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள கீழ்காணும் வாகனங்களுக்கு 2020-21ம் நிதியாண்டிற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டி புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்த கோரி தி நியு இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திடமிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன பதிவு எண். | காப்பீடு முடிவு தேதி | புதுப்பித்தல் பிரிமியத் தொகை |
|---|---|---|---|
| 1 | TN11 D 2013 | 2.7.2020 | ரூ.23505 |
| 2 | TN11 D 1289 | 2.7.2020 | ரூ.23328 |

**அலுவலக குறிப்பு:**

1. வாகனத்திற்கான புதுப்பித்தல் பிரிமியத் தொகை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று புதுப்பித்தல் பிரிமியத் தொகை செலுத்தியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.665 அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான போலிரோ வாகனம் எண். TN 11 AK 6142 அத்தியாவசிய பராமரிப்பு பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான இந்தியா கேரேஜ், சிட்லபாக்கம், சென்னை 64 நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி முடிக்கவும், அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.21000/—க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.666** **அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

தமிழக அரசு ஒவ்வொரு நாளும் மக்கள் நலனில் அக்கறை கொண்டு ‘‘கொரோனா வைரஸ்’’ தடுப்பு சம்பந்தமாக நாள்தோறும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசாணை எண்.305 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (டிஎம்2) துறை நாள் 17.6.2020ன் படி தமிழக அரசு மூலம் நான்கு மாவட்டங்களில் 19.6.2020 முதல் 30.6.2020 வரை முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், முன்னோடி அலுவலர் (Nodal Officer) மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கொரோணா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி, செங்கல்பட்டு மாவட்டம் சென்னை மாநகர காவல் எல்லைக்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கொரோணா தொற்று குறித்து அனைத்து குடியிருப்பு பகுதிகளில் கள ஆய்வு பணிக்கு தேவையான 1000 எண்ணிக்கை தெர்மல் ஸ்கேனர்கள் மற்றும் பல்ஸ் ஆக்ஸி மீட்டர் (Thermal Scanner and Pulse Oxi Meter) வாங்கி தாம்பரம் வருவாய் கோட்ட அலுவலரிடம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Oxi Meter | 1000 |
| 2 | Thermal Non Touch | 1000 |
| 3 | AAA Size Battery | 3000 |

மேலும், இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 15 ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான செலவினம் ரூ.3209480க்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சி சட்ட பிரிவு 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பதிவு செய்யலாம்.

2. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாநில பேரிடர் மேமாண்மை நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று வாருவாய் நிதிக்க ஈடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.667 அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.7

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 27.3.2020 முதல் 30.4.2020 வரையான காலத்திற்கு டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | 380800 |
| 2 | கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் திருமலை நகர் பகுதியில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடத்தில் நோய் தொற்று எற்பட்டவர்களை தனிமைபடுத்தி வைப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கட்டிடத்திற்கு மராமத்து பணிகள் மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் அருணாச்சலம் இன்பிராஸ்ரக்ஷர் டெவலப்மண்ட நிறுவனத்திற்கு வழங்கியது. | 454834 |
| 3 | கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் 5000 கி சப்ளை செய்த சாரம் என்வரோ சர்வீஸஸ் பி லிட் நிறுவனத்திற்கு வழங்கியது | 275000 |
| 4 | கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் தேவையான மருத்துவ உபகரணங்களான (என்95 மாஸ்க், லைசால், எஎலடிபிஇ கவர்கள், மாஸ்க், ஆம்பிளிபையர் ஸ்பிகர், தெர்மல் ஸ்கேனர், ஆட்டோமேடிக் சானிடைசிங் டிஸ்பென்சர், பெடஸ்ட்ரல் சானிடைர், பேஸ் கவர் மாஸ்க்) சப்ளை செய்த ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ்க்கு வழங்கியது | 1543440 |
| 5 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.5.2020 முதல் 31.5.2020 வரையான காலத்திற்கு இரு எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | 694000 |
| 6 | செம்பாக்கம் நகராட்சியின் பொது சுகாதார வாகனங்களான | 281107 |

| | | |
|---|---|---|
| | டாடா ஏஸி வாகனம் TN22 BX3570 மற்றும் லேயலண்டு டிப்பர் லாரி TN22 AZ1346 ஆகிய இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வாளரின் தகுதிச் சான்று 31.5.2020ம் தேதியில் முடிவு பெறுவதால் தகுதி சான்று பெற தக்க வகையில் பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட வகையில் வாகனவரியுடன் சேர்த்து மெஸ்ஸர்ஸ் எம்.கே.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு வழங்கியது | |
| 7 | தடை உத்திரவு காலத்தில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் காய்கறிகளை பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு வாடகை அடிப்படையில் வாகனங்கள் அமர்த்தப்பட்டது. வாடகை தொகை 13.4.2020 முதல் 21.4.2020 வரை வாகன உரிமையாளர்களுக்கு வழங்கியது | 216000 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.668** செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி